IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.131/2024

Deposition of Witness PW1

Name : பிரபாகரன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2023 அன்று காலை 06.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் கஞ்சா, ஹான்ஸ், குட்கா போன்ற குற்றங்கள் பற்றி ரகசிய தகவல் கிடைத்திருப்பதால் ரோந்து செல்லலாம் என்று என்னையும், என்னுடன் நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன், தலைமை காவலர் தனசேகரன், காவலர் குருமூர்த்தி ஆகியோரை அழைத்துக் கொண்டு காலை 06.30 மணிக்கு ஈரோடு பிருந்தா வீதி சென்றபோது அங்கே இரண்டு பேர் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை காவல் ஆய்வாளர் விசாரித்தபோது முன்னுக்குப் பின் முரணாக பேசியவர்கள் முதலாவது நபர் தனது பெயரை போலோராம் என்றும், இரண்டாவது நபர் தினேஷ் குமார் என்றும் கூறினார்கள். அவர்கள் கையில் வைத்திருந்த பையைப் பற்றி விசாரித்த போது சரியான பதில் கூறவில்லை. பிறகு விசாரித்ததில் அவர்கள் ஹான்ஸ் போன்ற பொருட்களை விற்பதற்காக வைத்திருந்ததை ஒப்புக் கொண்டார்கள். அவர்களை காலை 6.45 மணிக்கு ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார்கள். அப்போது போலாராம் என்பவர் தானாக

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:19:41 +0530

முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார் அதில் போலோராம் என்பவரும் தினேஷ்குமார் என்பவரின் இதுபோல் போன்ற போதை பொருட்களை சொந்தமாக வாங்கி விற்பனை செய்வதை ஒப்புக்கொண்டார் அதன்படி போலோராம் வைத்திருந்த 15 பவுச் ஹான்ஸ் மற்றும் 9 பூலிப் பாக்கெட்டுகளையும் காலை 7.45 மணிக்கு பொதுஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் உடன் வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன் காவலர் குருமூர்த்தி ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து கைப்பற்றினார்கள்.

பிறகு தினேஷ்குமார் வைத்திருந்த பையில் இருந்து பூலிப் மற்றும் ஹான்ஸ் பவுச்சுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை 8.15 மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். மேலும் போலோராம் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் அவர் குடோனில் பதிக்கி வைத்திருந்த சுமார் 182 கிலோ கிராம் எடையுள்ள ஹான்ஸ் மற்றும் பூலீப் பொருட்களை எடுத்து ஆஜர் செய்தார். அதை காலை 9.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். மேலும் கைப்பற்றிய சொத்துக்களுடன் எதிரிகள் போலோராம், தினேஷ்குமார் ஆகியோர்களுடன் நிலையம் வந்து பகல் 12.15 மணிக்கு எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.249/2023, சட்டப்பிரிவுகள் 328 IPC, 7,20(2) COTPA ACt பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் அன்றைய தினம் காலை 5:30 மணிக்கு நிலைய பணிக்கு வந்தேன். நான் நிலையத்தில் இருந்த போது தான் ஆய்வாளர் எனக்கு ரோந்து பணி செல்வது சம்பந்தமாக தகவல் சொன்னார். காலை 6.10 மணிக்கு நிலையத்திலிருந்து கிளம்பினோம். அன்றைய தினம் சுமார் 4 வீதிகளில் சோதனை செய்து பிறகுதான் சம்பவ இடத்திற்கு சென்றோம். அன்றைய தினம்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:19:47 +0530

யாரையும் விசாரிக்கவில்லை. ரோந்து பணிக்கு ஆய்வாளரின் ஜீப்பில் அனைவரும் சென்றோம். ஆய்வாளர், நான் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜ் ஆகியோர் சீருடையில் சென்றோம். எங்களை பார்த்ததும் எதிரிகள் ஓட முயற்சி செய்தார்களா என்றால் அந்த இடத்திலிருந்து நகர முயற்சி செய்தார்கள். வடக்கு திசையை நோக்கி நகர முயற்சி செய்தார்கள். எதிரிகள் வேகமாக நடக்க முயன்ற போது நாங்கள் அவர்களை பிடித்தோம். எதிரிகள் வெள்ளை நிற பாலிதீன் பேக்கை வைத்திருந்தார்கள். எதிரிகள் வைத்திருந்த பாக்கெட் ஒவ்வொன்றின் எடை எவ்வளவு என்றால் ஞாபகம் இல்லை. எதிரிகள் ஹான்ஸ், பூலிப் போன்ற பொருட்களை வைத்திருக்கவில்லை என்றும், அதனால் தான் நான் ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்துக்களை முதலில் ஆய்வாளர் தான் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் போடாததற்கு சிறப்பு காரணம் ஏதாவது உண்டா என்றால் இல்லை. உண்மையிலேயே நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதால் தான் நான் எந்த சாட்சி கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகளிடமிருந்து காவல் ஆய்வாளர் தான் பதிவு செய்தார். ஆய்வாளர் எதிரிகளின் பெயர் ஊர் மற்ற விவரங்கள் குறித்து கேள்வி கேட்க எதிரிகள் பதில் சொன்னார்கள் என்றால் சரிதான். எனது முன்னிலையில் எதிரிகளிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் கேள்வி பதிலின் அடிப்படையில் இருந்தது என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்ட கேள்விகளை விட்டுவிட்டு எதிரிகள் சொன்ன பதிலை மட்டும் பதிவு செய்தார் என்றால் பெயர், விலாசம் மட்டும் கேள்வி கேட்டார் மற்ற விவரங்களை எதிரிகளே சொன்னார்கள்.

எதிரிகள் முதலில் முன்னுக்குப் பின் கூறியதாக ஆய்வாளரின்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:19:54 +0530

விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். ஒப்புதல் வாக்குமூலமும் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது முன்னிலையில் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. கையால் எழுதப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் எதிரிகளிடமும், சாட்சிகளிடமும் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். எனது முன்னிலையில் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் கையால் எழுதப்பட்டது. ஆய்வாளர் தான் கைப்பற்றுதல் மகஜரை கையால் எழுதினார். குடோனில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் கைப்பற்றினார். சம்பவம் இடத்திற்கும், பொருட்கள் வைத்திருந்ததாக சொல்லப்படும் குடோன் உள்ள இடத்திற்கும் இடையே சுமார் 30 மீட்டர் தூரம் இருக்கும். அந்த குடோனின் உரிமையாளரை ஆய்வாளர் எனது முன்னிலையில் விசாரிக்கவில்லை. அந்த குடோனின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. குடோனில் கைப்பற்றப்பட்ட ஹான்ஸ் போன்ற பொருட்களின் எடை எத்தனை கிராம் மொத்தம் எத்தனை பாக்கெட்டுகள் என்றால் 9 பவுச்சுகள். ஒவ்வொரு பவுச்சிலும் 15 பாக்கெட்டுகள் இருக்கும் அதன் எடை எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள 182 கிலோ கிராம் என்பது நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எடை மெஷினில் எடை போட்டு பார்த்து தெரிந்து கொண்டேன்.

மேற்படி விவரத்தை நான் ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்து நிலையத்திற்கு ஜீப்பிலேயே அழைத்து வந்தோம். வழக்கு சொத்துக்களை கைப்பற்றி விசாரணை செய்து பிறகு 12:15 மணிக்கு நிலையம் வந்ததில் தாமதம் ஏற்பட்டது. அந்த குடோனின் முகப்பு பகுதியானது மேற்கு திசை நோக்கி இருந்தது. நான் அந்த சமயத்தில்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:20:00 +0530

ஆய்வாளருடன் ரோந்து செல்லவே இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகளும் இல்லை, அவர்களிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. அதனால் நான் எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எனது உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:20:05 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.131/2024

Deposition of Witness PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : குருமூர்த்தி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2023 அன்று ஈரோடு நகர காவல் நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர் பிரபாகரன், சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன், தலைமை காவலர் தனசேகரன் ஆகியோருடன் நானும் நகர காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து அலுவலில் இருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, புகையிலை, பான் மசாலா ஆகியவற்றை மார்க்கெட் ஏரியாவில் விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் படி ஈரோடு பிருந்தா வீதியில் சர்தன் டெக்ஸ்டைல்ஸ், PTS காம்ப்ளக்ஸ் முன்பு இரண்டு நபர்கள் கையில் பையுடன் சந்தேகத்தின் பேரில் இருந்தவர்கள் எங்களை கண்டதும் வேகமாக சென்றவர்களை ஆய்வாளர் அவர்களை விசாரித்ததில் முதலாவது நபர் போலோராம் என்றும், இரண்டாவது நபர் தினேஷ் குமார் என்றும் கூறினார்கள். மேலும் விசாரிக்க அவர்கள் கையில் வைத்திருந்த பையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் வைத்திருந்த காரணத்திற்காக காலை 6.45 மணிக்கு இருவரையும் கைது செய்தோம்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:20:13 +0530

முதலாவது நபர் தானாக வந்து ஒப்புக்கொண்டு எந்த வித அச்சுறுத்தலும் இல்லாமல் காலை 7-7.45 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு முதலாவது நபர் எடுத்து ஆஜர் செய்த பான் மசாலா, குட்கா ஆகியவற்றை 8.15 மணிக்கு கைப்பற்றியும், முதலாவது நபர் PTS காம்ப்ளக்ஸ் குடோனில் வைத்திருந்ததாக கூறியதின் பேரில் பான் மசாலா 550 பாக்கெட்டுகள், V1 Topogo 500 Pockets, Hans 335 Pockets, Pulip 215 pockets ஆக மொத்தம் 182.081Kg ஆகும். அதன் மொத்த மதிப்பு ரூபாய்1,71,510/- ஆகும். ஆஜர் எதிரி போலோராம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி போலராமிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி தினேஷ்குமாரிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.** குடோனில் இருந்து வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி சொத்துக்களை காலை 9.00 மணிக்கு ஆய்வாளர் கைப்பற்றினார். நிலையம் வந்து அரசால் தடை செய்யப்பட்ட பான் மசாலா, குட்கா வைத்திருந்த குற்றத்திற்காக எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.249/2023, சட்டப்பிரிவுகள் 328 IPC, 7,20(2) COTPA ACt பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ரோந்து பணிக்கு செல்லும்போது பணியில் தான் இருந்தேன். காலை 6.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு கிளம்பினோம்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:20:20 +0530

எத்தனை வீதிகளில் சோதனை செய்து சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால், ஈஸ்வரன் கோவில் வீதி, நேரு வீதி, திருவேங்கடம் வீதி ஆகிய இடங்களில் சோதனை செய்து கொண்டு சென்றோம். சம்பவ இடத்திற்கு நாங்கள் சீருடையில் சென்றோமா என்றால் என்னைத் தவிர மற்ற அனைவரும் சீருடையில் தான் சென்றோம். நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். உதவி ஆய்வாளர் பிரபாகரன் அவரது இருசக்கர வாகனத்தில் வந்தார். சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன் அவரது இருசக்கர வாகனத்தில் வந்தார். ஆய்வாளர் ஜீப்பில் வந்தார். நாங்கள் எல்லோரும் தனித்தனியாக தான் சென்றோம். முதலில் சம்பவ இடத்திற்கு ஆய்வாளர்தான் சென்றார். ஆய்வாளர் முதலில் அங்கு சென்று எதிரிகளைப் பிடித்தப் பிறகு எங்களுக்கு தகவல் சொல்லி நாங்கள் அங்கு சென்றோம்.

ஆய்வாளர் எங்களுக்கு தகவல் சொல்லி ஐந்து நிமிடத்தில் நாங்கள் அங்கு சென்று விட்டோம். ஆய்வாளர் எதிரிகளைப் பிடித்து விசாரித்து வழக்குச் சொத்துக்களை கைப்பற்றி எங்களுக்கு தகவல் சொன்ன பிறகு நாங்கள் சென்றோம். நாங்கள் போன பிறகுதான் ஆய்வாளர் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். ஆய்வாளர் எதிரியிடம் கேள்வி கேட்க எதிரி பதில் சொல்லிக்கொண்டு வந்தார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கேள்வி பதில் அடிப்படையில் இருந்தது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆய்வாளர் கேட்ட கேள்விகளை தவிர்த்துவிட்டு பதில்களை மட்டும் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது என்றால் ஆய்வாளர் கேட்ட கேள்வியும் ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலமானது கையால் எழுதப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. கையால் எழுதப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் எதிரியும் கையொப்பம் செய்தார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் சாட்சி கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜர் கையால் எழுதப்பட்டதா அல்லது

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:20:26 +0530

தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. கைப்பற்றுதல் மகஜரை ஆய்வாளர்தான் எழுதினார். எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பையானது துணி பையா அல்லது எந்த வகையான பை என்றால் சாக்குப்பை வைத்திருந்தார்கள். நாங்கள் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு எடை கொண்டது என்றால் Hans ஒரு பாக்கெட் எடை 20 கிராம், Pulip ஒரு பாக்கெட் எடை 0.75 கிராம், Pan masala ஒரு பாக்கெட் எடை 12 கிராம். கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு பாக்கெட்டும் எத்தனை கிராம் என மகஜரில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை மொத்த எடை எழுதப்பட்டுள்ளது.

வழக்கு சொத்துக்கள் இரண்டு இடத்தில் கைப்பற்றப்பட்டது. குடோனில் எதிரிகள் காட்டியதன் பேரில் ஆய்வாளர் தான் வழக்கு சொத்துக்களை எடுத்தார். அதற்கு பின்னிட்டு கைப்பற்றப்பட்ட சொத்துக்களை சம்பவ இடத்திலேயே வைத்து எடை போட்டு பார்க்கப்பட்டது. இரண்டு இடத்தில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் ஒரே இடத்தில் வைத்து எடை போடப்பட்டது. ஒரே இடத்தில் எடை போடும்போது தான் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒரே நேரத்தில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் முதலில் கைப்பற்றப்பட்டதற்கு தனியாகவும், இரண்டாவது கைப்பற்றப்பட்டதற்கு தனியாகவும் தயார் செய்யப்பட்டது. நான் இரு வேறு இடங்களில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டதா என்றால் சரியாக தெரியவில்லை. எதிரிகளை 12.20 மணிக்கு நிலையம் அழைத்து வந்தோம். 9.00 மணிக்கு கைப்பற்றப்பட்ட பின்பு 12:20 மணி வரை நிலையத்திற்கு அழைத்து வருவதற்கு ஏற்பட்ட தாமதத்திற்கு சிறப்பு காரணம் ஏதாவது உண்டா என்றால் விசாரணை செய்து கொண்டிருந்தோம். அந்த பகுதியானது குடியிருப்பு மற்றும் வணிக பகுதிகள் நிறைய உள்ள பகுதி என்றால் சரிதான்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.25 18:20:32 +0530

நாங்கள் சோதனை மற்றும் வழக்குத்துக்கள் கைப்பற்றிக் கொண்டிருக்கும்போது பொதுமக்கள் எல்லாம் அங்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் காலை 9 மணிக்கு அங்கு யாரும் இல்லை. ஒருவர், இரண்டு பேர் வந்தார்கள் ஆனால் சாட்சி கையொப்பம் போட யாரும் முன்வரவில்லை. நான் சம்பவ இடத்தில் வைத்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் தான் அங்கு சாட்சிகள் யாரிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நோட்புக் உள்ளது. அதை நான் பராமரித்து வருகிறேன். அதில் தினமும் எனது வேலை குறித்து குறிப்பு எழுதி வருவது வழக்கம். நான் ரோந்து பணிக்கு செல்வது குறித்து நோட்புக்கில் எழுதியுள்ளேனா என்றால் சரியாக தெரியவில்லை. நான் சம்பவத்தன்று ரோந்து செல்லவில்லை என்றும், நாங்கள் கைப்பற்றும்போதும் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நிரப்பப்படாத வெற்றுத் தாள்களில் எங்களிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களது காவல் நிலையத்தில் ஏற்கனவே வேறு வழக்குகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களை வைத்து இந்த வழக்கில் கைப்பற்றியது போல் வழக்கு சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல. எனது மேலதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல. பக்கத்தில் கடையிலிருந்து எடை மெஷின் வாங்கிக் கொண்டு வந்து நாங்கள் எடை போட்டோம்.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.09.25 18:20:39 +0530